 கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாகத் தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களில் சுமார் 250 பேருக்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் துண்டுபட்ட பணிக்காலங்களைக் கணக்கிட்டு செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமை குறித்து.

போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் அப்படி நடத்தினார்கள் என்று கேட்குமா ? அதைப்பற்றிப் பரிசீலனை செய்து அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாணையை சரியான முறையிலே செயல்படுத்தாததற்கு அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கப்பட்டு அதற்கேற்ப அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் ஊழியர் வேலை இழந்துள்ளது குறித்தும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்பட்டுள்ளதால் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும், ஊழியர்கள் வேலை இழந்துள்ளது குறித்தும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே, இந்தக் கலைக் களஞ்சிய அமைப்பு மூடப்படுவதற்கான காரணங்களைச் சொல்லி, அதிலே அரசு எடுத்த முடிவில், முக்கியமாக தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் இவ்வெளியீட்டு வேலையைக் கவனிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் இந்தக் கலைக் களஞ்சியத்தை வெளியிடும்போது, இந்தத் தமிழ் கலைக் களஞ்சியத்தின் விலை அதிகமாக இருப்பதாலும், அதைப் படிக்க விரும்புகின்ற எல்லோராலும் அதை வாங்க முடியாத நிலை இருப்பதாலும், அதிகமான விலையில் அந்தப் பதிப்பை

@ 325–326 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வெளியிடுவது மட்டுமல்லாமல், வசதி குறைந்தவர்களும் வாங்கக்கூடிய அளவில் மலிவு பதிப்புகளும் வெளியிடுவதற்கு அந்த நிறுவனம் வழிவகை செய்யுமா? அதைப்பற்றி அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காகப் போடப்பட்டிருக்கின்ற குழுவிலே அங்கத்தினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையின்படி, தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களிலிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ தொகுப்பாளர்கள் அமர்த்தப்படுவர். வேலையிழந்த கலைக் களஞ்சிய ஊழியர்களை, தேவைக்கேற்பவும், தகுதிக்கேற்பவும் அரசு இத்திட்டத்தை செயல்படுத்தும்போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவர் மீண்டும் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், இந்த வெளியீட்டு வேலையை எடுத்துக்கொள்ளும்போது, ஏற்கெனவே தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் வேலை செய்த ஊழியர்களுக்கு, உதவியாளருக்கு முன்னுரிமை கொடுத்து பணியிலே அமர்த்திய பிறகு, மீதி பணியிடங்களுக்கு, காலியிடங்களுக்கு வெளியிலேயிருந்து ஆட்களை எடுத்துக்கொள்ள அரசு பரிசிலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முன்னரே அந்தப் பணியில் இருந்தவர்களுக்குப் பணி அளிப்பதுபற்றி அரசு கவனிக்கும். ஆனால் வயதானவர்கள், தகுதியில்லாது இருப்பவர்களையெல்லாம் எடுத்துக் கொள்ள முடியாது என்பதுதான் இப்போது சொல்லியிருக்கின்ற கருத்து. மற்றப்படி அந்த வேலை செய்வதற்குரிய வயது, தகுதி பெற்றிருப்பவர்களை எடுத்துக் கொள்வதில் சங்கடமில்லை. அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்வதில் அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.